# கேள்வி கேட்டல்வழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்

# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு

# பெரிய புத்தகம் 11

# ’சுத்தம் சுகம் தரும்‘

---

**<u>கண்ணோட்டம்:</u>**

‘சுத்தம் சுகம் தரும்’ என்னும் கதையையொட்டி ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் பொருத்தமான விடையைக் கூறுவார்கள். ஆசிரியர் கேட்கும் கேள்விகளைப் புரிந்துகொண்டு அதற்குப் பொருத்தமான பதிலைச் சொல்லும்போது பிள்ளைகளது சொல்வளம் பெருகும். மேலும் பிள்ளைகள் புதிய சொற்களைப் பொருத்தமான சூழலில் பயன்படுத்தவும் அறிந்துகொள்வார்கள்.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழிக் கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**
    - புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)

## முன் தயாரிப்பு:

பின்வருவனவற்றை வகுப்புக்குக்கொண்டு வாருங்கள்.

- சுத்தமான இடங்களைக் காட்டும் படங்கள்
- அசுத்தமான இடங்களைக் காட்டும் படங்கள்

## பாட அறிமுகம்

1. கொண்டு வந்த படங்களைப் பிள்ளைகளிடம் காட்டி அவற்றிடையே உள்ள வேறுபாடுகளை அடையாளம் காணச் சொல்லுங்கள்.

2. பின்னர், கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.



- இந்த இடம் எப்படி இருக்கிறது?
- இம்மாதிரியான இடத்தை நீ விரும்புவாயா? ஏன்?
- குப்பை போடுவது சரியா? ஏன்?



- இந்த இடம் பார்க்க எப்படி இருக்கிறது?
- நீ இந்த இடத்திற்குச் செல்வாயா? ஏன்?

## பாட வளர்ச்சி

3. ‘சுத்தம் சுகம் தரும்’ என்னும் கதையின் தலைப்பைப் பிள்ளைகளிடம் படித்துக்காட்டி அதன் பொருளை விளக்குங்கள்.



4. எவற்றையெல்லாம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று பிள்ளைகளிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள். (விடை: உடல், வகுப்பறை, வீடு, சுற்றுப்புறம்)

5. கதையைப் பிள்ளைகளிடம் உயிரோட்டத்துடன் படித்துக் காட்டுங்கள். அவர்களையும் உங்களுடன் சேர்ந்து படிக்கச் சொல்லுங்கள்.

6. கதையைப் படிக்கும்போதே கதையில் உள்ள சில சொற்களையும் படங்களையும் சுட்டிக்காட்டி விளக்குங்கள். அதைப்பற்றிப் பிள்ளைகளிடம் கேள்வி கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- படத்தில் இடுக்கியும் கையுறைகளும் எங்கே இருக்கின்றன?
- அவற்றை எதற்குப் பயன்படுத்தலாம்?




7. ஒவ்வொரு பக்கத்தையும் படித்து முடித்த பிறகு, கீழ்க்காணும் கேள்விகளைப் பிள்ளைகளிடம் கேளுங்கள்.




கடற்கரை இப்படி இருந்தால் உங்களுக்குப் பிடிக்குமா? ஏன்?




இவர்கள் எங்கே போகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஏன்?




இவர்கள் எல்லாரும் என்ன செய்கிறார்கள்? ஏன்? (சுவைபானத்தைவிட தண்ணீர் குடிப்பது சிறந்தது என்பதை வலியுறுத்துங்கள்)

8. புதிதாகக் கற்றுக்கொண்ட சொற்களை நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.

**************************